பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

15 05 2024 **WEDNESDAY** **7.15 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைக்கான ஐந்தாவது மற்றும் ஆறாவது கட்டத்தேர்தல் நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

2. மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் நக்சலைட் பிரச்சினை வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

3. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பான வாக்குறுதிகளை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் குற்றம் சாட்டியுள்ளது.

4. ஜார்கண்ட்டில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அம்மாநில அமைச்சர் திரு **Alamgir Alam**-மை அமலாக்கத்துறையினர் கைது செய்துள்ளனர்.

5. **Sharjah** மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் **Arjun Erigaisi** வெற்றிபெற்றார்.

*------ இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>**

மக்களவைக்கு ஐந்து மற்றும் ஆறாம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள தொகுதிகளில், மேற்கொள்ளப்பட்டுவரும் முன்னேற்பாட்டுப்பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஷ்குமார், திரு சுக்பீர் சிங் சந்து ஆகியோருடன் இணைந்து, காணொலி வாயிலாக மேற்கொண்ட இந்த ஆலோசனையில், தேர்தல் பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

ஐந்தாவது கட்டமாக வரும் 20-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 49 தொகுதிகளுக்கான தேர்தல் பார்வையாளர்களும், ஆறாம் கட்டமாக வரும் 25-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ள 58 தொகுதிகளுக்கான பார்வையாளர்களும் இதில் கலந்துகொண்டதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்குப்பதிவு நேர்மையாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நடைபெறுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உறுதி செய்யுமாறு திரு ராஜீவ்குமார் இந்த கூட்டத்தில் அறிவுறுத்தியதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளில் உரிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்தும் தேர்தல் பார்வையாளர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் தலைமை தேர்தல் ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, 7-ஆம் கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 57 தொகுதிகளில் வேட்புமனுக்கள் பரிசீலனை இன்று நடைபெற்றது.

மனுக்களை விலக்கிக்கொள்ள நாளை மறுநாள் கடைசிநாளாகும்.

அன்றைய தினமே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படுகிறது.

இந்த தொகுதிகளில் அடுத்த மாதம் ஒன்றாம் தேதி வாக்குப்பதிவு நடைபெறகிறது.

மக்களவைக்கு ஏழு கட்டங்களாக கடந்த மாதம் 19-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் ஒன்றாம் தேதிவரை தேர்தல் நடைபெறுகிறது.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் நான்காம் தேதி மேற்கொள்ளப்படும்.

<<<<<<>>>>>

ஆந்திராவில் தேர்தலுக்கு பிந்தைய வன்முறை சம்பவங்கள் தொடர்பாக, அம்மாநில தலைமைச்செயலர் மற்றும் காவல்துறை தலைவர் நாளை நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பியுள்ளது.

அம்மாநிலத்தில் மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குப்பதிவு முடிவடைந்த பின்னர் நடைபெற்றுவரும் வன்முறை சம்பவங்களையடுத்து தேர்தல் ஆணையம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இதுகுறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யப்பட வேண்டும் என்றும் அதில் கோரப்பட்டுள்ளது.

சட்டம் - ஒழுங்கை பராமரிப்பதில் ஏற்பட்ட குறைபாடுகள் குறித்தும் விளக்கம் அளிக்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

நாட்டு மக்களின் நன்மதிப்பை பெற்ற கட்சியாக பிஜேபி திகழ்கிறது என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். மகாராஷ்ட்ராவில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார். மக்களின் ஆதரவே தமக்கு பலத்தை அளிப்பதாக அவர் குறிப்பிட்டார். நாட்டிற்காக சேவையாற்ற வேண்டும் என்பதே தமது லட்சியமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் கடந்த பத்தாண்டுகளில் மக்கள் நலனுக்காக நிறைவேற்றப்பட்ட திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார். கட்டமைப்பு வசதிகள் இதுவரை இல்லாத அளவிற்கு மேம்படுத்தப்பட்டிருப்பதாகவும் திரு நரேந்திர மோடி கூறினார்.

<<<<<<>>>>>

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது தொடர்பான வாக்குறுதிகளை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு நிறைவேற்றவில்லை என்று காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே குற்றம் சாட்டியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், இரண்டு கோடி வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று பிஜேபி வாக்குறுதி அளித்ததை சுட்டிக்காட்டினார்.

இதனை ஏன் நிறைவேற்றவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சிப்பொறுப்பேற்றால் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்றும் திரு மல்லிகார்ஜுன கார்கே கூறினார்.

<<<<<<>>>>>

பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பொறுப்பேற்றபின்னர் நக்சலைட் பிரச்சினை வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், ஜார்கண்ட, பீகார், தெலங்கானா, ஒடிஷா, ஆந்திரா, மத்தியப்பிரதேசம் மற்றும் மகாராஷ்ட்ராவில் நக்சலைட் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சத்தீஸ்கரின் சில மாவட்டங்களில் மட்டும் இப்பிரச்சினை நீடிப்பதாக அவர் கூறினார்.

அந்த மாநிலத்தில் பிஜேபி ஆட்சிப்பொறுப்பேற்ற ஐந்து மாதத்திற்குள் 112 நக்சலைட்டுகள் பாதுகாப்புப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

375 பேர் ஆயுதங்களை கைவிட்டு சரணடைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

153 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>

ஜார்கண்ட்டில் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த அம்மாநில அமைச்சர் திரு **Alamgir Alam**-மை அமலாக்கத்துறையினர் கைது செய்துள்ளனர்.

அமைச்சரின் பாதுகாப்பு அதிகாரியான திரு சஞ்ஜீவ் லாலின் வீட்டு பணியாளரின் இல்லத்திலிருந்து பெருமளவு பணம் பறிமுதல் செய்யப்பட்டதையடுத்து, இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

தில்லி முன்னாள் துணை முதலமைச்சர் திரு மனிஷ் சிசோடியாவின் நீதிமன்ற காவல் வரும் 30-ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

தில்லி சிறப்பு நீதிமன்ற நீதிபதி திருமதி **Kaveri Baweja** இதற்கான உத்தரவினை பிறப்பித்தார்.

முன்னதாக, சிறையில் உள்ள திரு சிசோடியா, காணொலி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார்.

**<<<<<<>>>>>**

குடியுரிமை சான்றிதழ்கள் இன்று புதுதில்லியில் வழங்கப்பட்டன.

குடியுரிமை திருத்தச்சட்டத்திற்கான அறிவிக்கை வெளியிடப்பட்ட பின்னர், முதல்கட்டமாக விண்ணப்பித்த 14 பேருக்கு இந்த சான்றிதழ்களை மத்திய உள்துறை செயலர் திரு அஜய் பல்லா வழங்கினார்.

சான்றிதழ்களை பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்த திரு அஜய் பல்லா, அதுதொடர்பான விவரங்களையும் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

**<<<<<<>>>>>**

இந்தியா – ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இடையேயான தூதரக அலுவலர்கள் தொடர்பான கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இந்தியாவின் சார்பில் வெளியுறவுத்துறை அதிகாரி திரு **Muktesh Pardeshi** தலைமையிலான குழுவினரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் சார்பில் அந்நாட்டு வெளியுறவுத்துறையின் நிரந்தர செயலர் திரு **Khaled Belhoul** தலைமையிலான குழுவினரும் இதில் பங்கேற்றனர்.

இருநாடுகளுக்கு இடையேயான உறவை மேலும் வலுப்படுத்துவது குறித்து இதில் விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>**

இலங்கையில் பாதுகாப்பு தளவாடங்கள் உற்பத்தி பிரிவை ஏற்படுத்துவது தொடர்பாக அந்நாட்டு அரசு இந்தியாவுடன் பேச்சு நடத்தி வருகிறது.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு **Premitha Bandara Tennakoon,** பாதுகாப்பு தளவாட உற்பத்தியில் இந்தியாவின் வளர்ச்சியை பயன்படுத்திக்கொள்ளும் நோக்கில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாக கூறினார்.

**<<<<<<>>>>>**

**Cannes** திரைப்பட விழாவில் இந்திய அரங்கினை தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு **Sanjay Jaju** இன்று திறந்துவைத்தார்.

இந்தியாவில் உள்ள திரைப்பட தயாரிப்பு நிறுவனங்களுக்கு சர்வதேச வாய்ப்புகளை வழங்க இந்த அரங்கு உதவிடும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

ராஜஸ்தானில் நேரிட்ட சுரங்க விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 14 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

**Thana** மாவட்டத்துக்கு உட்பட்ட பகுதியில் சுரங்கத்திற்கு அலுவலர்களை அழைத்து சென்ற இழுவை இயந்திரம் அறுந்து விழுந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் கூறினர்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் தொட்டபெட்டா காட்சி முனை நாளை முதல், வரும் 22-ஆம் தேதிவரை தற்காலிகமாக மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**Fast Tag** சோதனைச்சாவடியை மாற்றியமைக்கும் பணி மேற்கொள்ளப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Sharjah** மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் முதல் சுற்றில் இந்தியாவின் **Arjun Erigaisi** வெற்றிபெற்றார்.

அஜர்பைஜானின் **Eltaj Safarli** –ஐ அவர் முதல் சுற்றில் வென்றார்.

இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் மற்றும் இனியனும் முதல் சுற்றில் வெற்றிபெற்றனர்.

---------------

தாய்லாந்து ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Meiraba Luwang Maisnam** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-19, 21-18 என்ற செட் கணக்கில், இந்தியாவின் பிரணாயை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில், சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணை, 21-13, 21-13 என்ற செட் கணக்கில், மலேசியாவின் **Nur Mohd Azriyn Ayub Azriyn – Wee Kiong Tan** இணையை வென்றது.

மகளிர் ஒற்றையர் பிரிவில் **Ashmita Chaliha** –வும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 19-21, 21-15, 21-14 என்ற செட் கணக்கில், இந்தோனேஷியாவின் **Ester Nurmi Tri Wardoyo** –வை வென்றார்.

---------------

சுவிட்சர்லாந்தில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் தகுதி சுற்று படகு போட்டியில் பங்கேற்பதற்கான ஆறு பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------

**Elorda** கோப்பைக்கான குத்துச்சண்டை போட்டியில் இந்தியாவின் மனிஷா மற்றும் மோனிகா அரையிறுதிக்கு முன்னேறினர்.

கஜகஸ்தானின் அஸ்தானாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 60 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் மனிஷா – கஜகஸ்தானின் **Zabynbekoya**-வை வென்றார்.

மகளிர் 81 கிலோ எடைப்பிரிவில் மோனிகா – கஜகஸ்தானின் **Islambekova Dina**-வை வென்றார்.

-------------------

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இன்று ராஜஸ்தான் அணியை எதிர்கொள்கிறது.

குவஹாத்தியில் இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ள இப்போட்டியில் டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்துள்ளது

**<<<<<<END>>>>>**